[28th January 1956

THE HON. SRI C. SUBRAMANIAM : There is a *prima facie* case. That is why the matter is under examination.

### *Bonus for textile mill workers in Coimbatore district*

* 3077 *Q.*—SRI N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether it is a fact that an Arbitration Board has been constituted under the Chairmanship of Sri N. S. Arunachalam, Secretary, Industries, Labour and Co-operation Department, during October 1955 to decide the bonus issue of the Textile Mill Workers of 22 mills in Coimbatore for the year 1954; and

(*b*) whether the Board has conducted any enquiry?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) The Board heard the parties to the dispute. The Chairman gave his award on 28th October 1955.

SRI N. K. PALANISAMY : கோயம்புத்தூரிலுள்ள ஒரு மில்லில் ஒவ்வொரு வருஷமும் அதிகப்படியான லாபம் வந்தபோதிலும், ஒரே விதமான போனஸ் அளிக்கப்பட்டது. அதாவது 1953-ம் வருஷத்தில் நான்கு மாத போனஸ் கொடுக்கப்பட்டது. 1954-ம் வருஷத்தில் 17 லட்ச ரூபாய் லாபம் வந்தும் நான்கு மாத போனஸ்தான் அளிக்கப்பட்டது. 1955-ம் வருஷத்தில் 24 லட்சம் ரூபாய் லாபம் வந்தும் நான்கு மாத போனஸ்தான் கொடுக்கப்பட்டது. ஆகையால் லாபத்தைப் பொருத்து போனஸ் கொடுக்கப்படுகிறதா அல்லது வேறு எந்த அடிப்படையில் இந்த போனஸை நிர்ணயிக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கோயம்புத்தூர் மில்லில் உள்ள தொழிலாளர்களும், முதலாளிகளும் எல்லோருமாக சேர்ந்து ஒப்புக்கொண்டு மத்தியஸ்தர் போர்டுபடி ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதன்படிதான் லாபம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

MR. SPEAKER : Question time is over.

## III.—STATEMENT UNDER RULE 40 *RE* LATHI CHARGE, ETC., IN SALEM, MADURAI, MADRAS, KASARGODE AND TIRUCIRRAPPALLI.

10-10 a.m. MR. SPEAKER : Notice has been received of the folowing :—

" Sri C. Kandasamy will call attention of the Hon. Minister for Finance to a matter of urgent public importance, viz., lathi charge, etc., in Salem, Madurai, Madras, Kasargode and Tiruchirappalli agains common people for agitating and demonstrating peacefully for a just and democratic adjustment of boundaries and against the proposal to form a Southern State."

SRI C. KANDASAMY : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த பிரேரணையை கொண்டு வந்ததின் நோக்கம், இன்றைய தினம் ராஜ்யம் பூராவும் ஏற்பட்டிருக்கும் குழப்பமும் கொந்தளிப்பும் இந்நாட்டு மக்களுக்கு மிகுந்த வேதனையாக இருக்கிறபடியால் இதை சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவர நினைக்கிறேன். ராஜ்ய சீரமைப்பு கமிஷன் ரிபோர்ட்டின் பேரில் மத்திய சர்க்கார் அறிவித்ததின்பேரில் இன்றைய தினம் நாட்டில் இந்த விதமான கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதை